## கோயம்புத்தூரில் தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பு-2015 மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------------------------

கோயம்புத்தூர் தாஜ் விவாண்டா ஹோட்டல் வளாகத்தில் வருகின்ற மே 23, 24 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெறவுள்ள உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்றிடும் வகையிலும், முதலீட்டாளர்களை கவர்ந்திடும் வகையிலும், தமிழ்நாடு உலகளாவிய முதலீட்டாளர்கள் சந்திப்பு-2015 மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் தலைமையில் இன்று (18.04.2015) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் பேசியதாவது,**

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி வருகின்ற மே 23, 24 ஆகிய நாட்களில் சென்னையில் உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் இந்த மாநாட்டில் ரூ.1லட்சம் கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம், வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் முதலீட்டார்கள் சந்திப்பு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் முதல்முறையாக கோயம்புத்தூரில் முதலீட்டாளர்கள் சந்திப்பு நடைபெறுகின்றது. ஏற்கனவே இந்தச்சந்திப்பிற்கு முன்னோட்டமாக கடந்த வருட இறுதியில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய மக்களின் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, தீவிர நடவடிக்ககைள் எடுக்கப்பட்டு வருகின்றது. மற்ற மாநிலங்களை விட ஜவுளித்துறையில் 46சதவீதம் பின்னலாடை தொழிற்சாலைகள் தமிழகத்தில் உள்ளன. அதே போன்று தமிழகத்தில் 657கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 507பொறியியல் கல்லூரிகள், 800 பல் தொழில்நுட்ப கல்லூரிகள், 1551தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக வருடந்தோறும் 6முதல் 7லட்சம் வரை படித்த இளைஞர்கள் உருவாகின்றனர். இதுபோன்ற சாதகமான சூழ்நிலைகள் வெறு எந்த மாநிலத்திலும் கிடையாது, தமிழக அரசு தொழில் முனைவோர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் உடனடியாக நிறைவேற்றி வருகிறது. மேலும், தமிழகத்தில் புதிய தொழில் முனைவோர்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு விரைவாக வழங்கிட மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. மின்பற்றாகுறை ஏற்பட்ட காலத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய தமிழக அரசு ரூ.90கோடி செலவில் வரிச்சலுகை அளித்து முதலீட்டாளர்களை தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. 2011ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இன்று வரை ரூ.2,52,000 கோடி அளவிற்கு கூடுதலாக தமிழக அரசு முதலீடுகளை

கவர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி 7.29சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது. இது இந்தியாவின் ஒட்டு மொத்த வளர்ச்சியான 4.74சதவீத்தைவிடக் கூடுதலாகும். அதே போன்று சிறு குறு தொழிற்சாலைகளை தொடர்ந்து தமிழக அரசு ஊக்குவித்து வருகின்றது. இதன் காரணமாக மற்ற மாநிலங்களில் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் 36,869 தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது. பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தொழில் தொடங்க அழைப்புகள் வந்த போதெல்லம், அழைப்புகளை நிராகரித்து தமிழகத்தில் தொடர்ந்து தொழில் செய்து வரும் தொழிலதிபர்களை தமிழக அரசு பாராட்டுகிறது. எனவே தொழிலதிபர்களுக்கு எந்தவிதத்திலும் தடையாக இல்லாமல் படிக்கற்காளாக தொடர்ந்து இந்த அரசு செயல்படும். மேலும் கோயம்புத்தூர் மாநகரம், தொழில்முனைவதற்கு சிறப்பான சூழலை தன்னகத்தே பெற்றுள்ளது. தொழிற்சாலைகள் அமைவதற்கு சிறப்பான கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுள்ளது. பிற மாநிலங்களில் தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படாததாலும், சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளாலும் தொடர்ந்து தொழில் செய்ய இயலாமல் நலிவடைந்து வருகிறது. ஆனால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நல்லமுறையில் இருப்பதால் தொழில் செய்ய சிறப்பான சூழ்நிலையை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். தொழில் துறையின் சார்பில் தொழில் முனைவோர்களுக்கு அனைத்து விதமான சலுகைகளையும் வழங்கிட அரசு தயாராக உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூரில் சாயப்பட்டரை பிரச்சனைகளுக்கு தீர்வுகான ரூ.200 கோடி அளவிற்கு வட்டியில்லா கடன் வழங்கி தொடர்ந்து தொழில் செய்ய ஆதரவுக்கரம் நீட்டியதன் காரணமாக ரூ.21ஆயிரம் கோடியாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவிலேயே முதன்முறையாக 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒற்றை சாளர முறையில் Guidence Buereo என்ற அமைப்பை ஏற்படுத்தி தொழில் தொடங்குவதற்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் பெற வழிவகை செய்துள்ளார்கள். தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ள 3000 வெளிநாட்டு கம்பெனிகளில் 567 ஜப்பான் நாட்டு கம்பெனிகள் செயல்பட்டு வருகிறது. அதாவது 5இல் 1 பங்கு கம்பெனிகளை தமிழகத்தில் முதலீடு செய்துள்ளது. இதுபோன்ற சிறப்பான சூழ்நிலை தமிழகத்தில் உள்ளது. தொழில் தொடங்குவதற்கு சட்டம் ஒழுங்கு மிக அவசியமானதாகும்.அப்போது தான் மிக அமைதியான முறையில் தொழில் நடக்கும் அது தமிழகத்தில் மிக சிறப்பான முறையில் உள்ளது. மற்ற மாநிலங்களைவிட சட்டம் ஒழுங்கில் தமிழகம் முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. தமிழகத்தில் ஆண்டுக்கு 14,00,000 கார்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு நிமிடத்திற்கு 3 கார்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் டிரக் வாகனங்கள் 3,60,000 வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் அனைத்து தொழிலிலும் திறமைமிக்க தொழிலாளர்கள் உள்ளார்கள். இந்த சூழ்நிலையில் தமிழகத்தில் தொழில்களிலும் சிறப்பான நடைபெறுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. அதை முறையாக பயன்படுத்தி தொழிலை மேன்மேலும் மேம்படுத்தி கொள்ளலாம். வருகின்ற மே மாதம் 23, 24 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற உள்ள உலகளாவிய முதலீட்டாளர்கள்

மாநாட்டில் கோயம்புத்தூரிலிருந்து அதிகளவில் கலந்து கொண்டு முதலீடு செய்ய வேண்டும் தமிழக அரசின் ரூ.1லட்சம் கோடி முதலீடு எனும் செயல் திட்டத்திற்கு வடிவம் கொடுக்க அனைத்து தொழிலளதிபர்களும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் எனப் பேசினார்.

**இவ்விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் பேசியதாவது,**

மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி மிக சிறப்பான முறையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்றது வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டம் தென்இந்தியாவின் மான்செஸ்டராக விளங்குகிறது. அதனை நிலை நிறுத்தும் வகையில் தொழிலதிபர்கள் மிகச்சிறப்பான முறையில் அரசின் சலுகைகள் பெற்று தொழிலை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழில் தொடங்க போதுமான வகையில் பொருத்தமானதாக உள்ளது. கோயம்புத்தூர் மாநகரில் தொடர்ந்து தொழில் செய்திடும் வகையிலும் தொழில் தொடங்க சாதகமான சூழ்நிலையை உருவாக்கிடும் வகையிலும் தமிழக அரசின் சார்பில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் காந்திபுரம் மேம்பாலப்பணிள், ஒருங்கிணைந்த பேருந்து நிலையம், லாரிப்பேட்டை போன்ற வளர்ச்சித்திட்டப்பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டிலேயே சென்னைக்கு அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாவட்டம் வளர்ந்து வரும் மாவட்டமாக திகழ்ந்து வருகிறது. தொழில் தொடங்க உட்கட்டமைப்பு வசதிகள் போதுமான அளவில் உள்ளது. எனப்பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு கூடுதல் தலைமை செயலர் (தொழில்துறை) திரு.சி.வி.சங்கர் இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.அர்ச்சனாபட்நாயக் இ.ஆ.ப., இந்திய தொழில்கூட்டமைப்பின் தெற்கு மண்டலத்தலைவர் திருமதி.ராஜஸ்ரீபதி, கோயம்புத்தூர் மண்டலத்தலைவர் திரு.ஸ்ரீனிவாசன், துணை தலைவர் திருமதி.நோதரா ஜே.எஸ்.குமார், இந்திய தொழிலாளர் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு.ரவிசாம், கோயம்புத்தூர் மண்டல தொழிலாளர் கூட்டமைப்புத் தலைவர் திரு.கே.இளங்கோ, ஆகியோர் உட்பட தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.